**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG30 – நிலை 3 – (Grade 3)**
**நேரடி எழுத்துத் தேர்வு** (Offline Examination)
**ஜனவரி–பிப்ரவரி 2022**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பிரிவு – 1**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. தொழில் செய்து கடவுளை ஏத்துபவை எவை?
2. சிறந்த அறங்களில் முதன்மையான ஒன்றினைக் கூறுக.
3. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களைக் கொண்டது?
4. ஐந்து வேர்களுக்கு வழங்கும் பெயர் என்ன?
5. மன்னுதல் என்பதன் பொருள் யாது ?
6. திணை என்ற சொல்லின் பொருள் யாது?
7. குறிஞ்சி நிலத்திற்குரிய நிலம் யாது?
8. கடுவாய் என்பது என்ன?
9. பாக்கள் எத்தனை வகைப்படும்?
10. சோழனின் ஆணைச்சக்கரம் போல வலம் வருவது எது?

**பிரிவு – 2**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.** **(10x2=20)**
Answer any ten questions in three lines each.

1. கண், கால் இவற்றிற்கு வனப்பாவன யாவை?
2. சாலை இளந்திரையன் யாரை வழிகாட்டியாகக் கொண்டார்?
3. தக்கார், தகவிலர் என்பது எதனால் காணப்படும்?
4. கள்ளி, கடல் இவற்றுள் பிறப்பவை யாவை?
5. நடுகல் என்பது யாது?
6. மழை பெய்வதற்கான அறிகுறிகள் என்னென்ன?
7. தமிழின் தனிசிறப்பு என்ன?
8. சான்றோர்க்கு அணி யாவது யாது?
9. எள் செக்கிலிட்டால் கிடைக்கும் பொருள்கள் யாவை?
10. மாத்திரை என்றால் என்ன?
11. ஆகுபெயர் என்றால் என்ன?

12. எற்பாடு என்பதன் விளக்கம் யாது?

13. தாவர உறுப்பு பற்றிய மரபுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

14. மக்களின் வாழ்நிலையை தீர்மானிப்பது எது?

15. இருவகை வாக்கியங்கள் எவை ?

### பிரிவு – 3

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. 'சினம் விடுக' – என நான்மணிக்கடிகை கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
2. "புலியை விரட்ட துப்பில்லாதவர்கள் என்னை விரட்டுகிறார்கள்" என்று மணி சொல்லிக்கொண்டே ஓடியது ஏன்?
3. தமிழ் மொழியின் பதினாறு பண்புகள் எவை என பாவாணர் கூறுகிறார்?
4. கலம்பகம் என்றால் என்ன?
5. பறவை – விலங்குகளின் உறைவிட மரபுகள் எவையேனும் ஆறு எழுதுக.
6. அறுவகை பெயர்களை கூறி , எடுத்துக்காட்டு தருக.
7.

பிரமாபுரம் என்னும் திருத்தலத்தில் கோவில் கொண்டுள்ள சிவனின் சிறப்புகளை எழுதுக.

8. சொல்லின் இரு பிரிவுகளையும் அதன் வகை சொற்களையும் எழுதுக.

### பிரிவு – 4

**III. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. குற்றால மலையின் இயற்கை அழகையும் அங்கு கிடைக்கும் பொருட்களைப் பற்றியும் எழுதுக.
2. வானவூர்தி பற்றிய செய்திகளை தொகுத்து எழுதுக.
3. பகுபத உறுப்புகள் – விளக்குக.

### பிரிவு – 5

**IV. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. காவிரியாற்றின் வரலாற்றினை உன் பாடப்பகுதி வழி நின்று தொகுத்து ஒரு கட்டுரை எழுதுக.
2. தற்குறிப்பேற்ற அணி, வஞ்சப்புகழ்ச்சி அணி, பிறிது மொழிதல் அணி ஆகியவற்றை விளக்கி, எடுத்துக்காட்டுகள் தருக.

******